
# தமிழோடு இணைவோம்: அழகே! தமிழே! 2026



திருவாட்டி காயத்ரி
திருவாட்டி மகேஸ்வரி
ஜெமின் தொடக்கப்பள்ளி

# அறிமுக நடவடிக்கை

# விளையாடுவோம்

பகடையை உருட்டு!
சொல்லு!





# பகடையை உருட்டு! சொல்லு!

| எண் | எப்படிச் சொல்ல வேண்டும்? |
|---|---|
| 1 | வேகமாகச் சொல் |
| 2 | மெதுவாகச் சொல் |
| 3 | உரக்கச் சொல் |
| 4 | கோபமாகச் சொல் |
| 5 | மெல்லிய குரலில் சொல் |
| 6 | சிரித்துக்கொண்டே சொல் |

| என்ன சொல்ல வேண்டும்? |
|---|
| வணக்கம் அண்ணா! |
| உங்கள் உதவிக்கு நன்றி! |
| தயவுசெய்து சொல்கிறீர்களா? |
| என்னை மன்னித்துவிடுங்கள்! |

விளையாட்டு முறை

1. முதலில் பகடையை உருட்டுங்கள்.
2. எந்த வசனத்தைச் சொல்ல விரும்புகிறீர்கள் என்பதைத் தேர்ந்தெடுங்கள். (பச்சை = பிள்ளை, நீலம்= பெற்றோர்)
3. எந்த எண்ணில் உங்களது பகடை நிறுத்துகிறதோ அந்த எண்ணுக்குரிய உணர்ச்சியுடன் உங்களது வசனத்தைச் சொல்லுங்கள்.
4. இவ்வாறு அடுத்தடுத்த விளையாட்டாளர்கள் தொடர்ந்து விளையாடுவார்கள்.

# நோக்கம்

- பிள்ளைகளைத் தமிழில் பேச ஊக்குவித்தல்
- பெற்றோர்களுடன் சில உத்திகளைப் பகிர்ந்துகொள்ளுதல்

## இந்நோக்கத்தின்வழி

- பிள்ளைகள் தமிழில் பேச ஆர்வத்தைத் தூண்டலாம்.
- பிள்ளைகளிடத்தில் இருக்கக்கூடிய பயத்தை நீக்கலாம்.
- பிள்ளைகள் தன்னம்பிக்கையுடன் பேச முயலலாம்.


# ஏன் பெற்றோர்?

பிள்ளைகள் பெற்றோருடன் பேச

- பயப்படமாட்டார்கள்
- வெட்கப்படமாட்டார்கள்
- தயங்கமாட்டார்கள்
- முயல்வார்கள்

# படங்கள் கூறும் கதை

## நீங்கள் இவற்றை பார்த்திருக்கிறீர்களா?




# படங்கள் கூறும் கதை

- கொடுக்கப்பட்டிருக்கும் பட அட்டையில் இடம்பெற்றுள்ள படங்களில் மூன்றினைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுதல்
- பிள்ளைகள் மூன்று வாக்கியங்களைக் கொண்ட கதையைக் கூற வேண்டும்
- பெற்றோர் பிள்ளைகளிடம் கேள்விகள் கேட்டு உதவலாம்
- பிள்ளைகள் கதையைக் கூறி முடித்தவுடன் பெற்றோர் அவர்களைப் பாராட்டலாம்

# படங்கள் கூறும் கதை

| **பெற்றோர் கேட்கக் கூடிய கேள்விகள்** |
| --- |
| ➢ இது என்ன? |
| ➢ அவன் என்ன செய்கிறான்? |
| ➢ அவன் ஏன் அப்படிச் செய்கிறான்? |
| ➢ அவனுடைய மனநிலை எப்படி இருக்கிறது? |

# எடுத்துக்காட்டு...



## படங்கள் கூறும் கதை

| | | |
|---|---|---|
|  |  |  |
| இது என்ன? | அவனுக்கு எப்படி இருந்தது? | பிறகு அவன் என்ன செய்தான்? |

## படங்கள் கூறும் கதை





அப்பா கேக் வாங்கி வந்தார்.
ரவி மகிழ்ச்சி அடைந்தான்.
அவன் கேக்கைச் சாப்பிட்டான்.

# ஏன் இந்த அணுகுமுறை?

- தெரிந்ததைக் கொண்டு பேசத் தூண்டும்போது பயம் நீங்கும்.
- தமிழில் பேச வாய்ப்புகள் அதிகரிக்கும்.

# நடவடிக்கை நேரம்

# முதல் சுற்று

- முதலில், பெற்றோர் 3 படங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைக்கொண்டு கதையை உருவாக்க வேண்டும்.
- இப்போது, பிள்ளைகள் 3 படங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.
- பின்னர், பெற்றோர் அதையொட்டிக் கேள்விகளைக் கேட்டுத் தம் பிள்ளைக்கு உதவலாம்
- பிள்ளை பெற்றோரிடம் தான் உருவாக்கிய கதையைச் சொல்ல வேண்டும்

10 நிமிடங்கள்

# இரண்டாவது சுற்று

- பெற்றோரும் பிள்ளையும் சேர்ந்து 4 படங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்
- இருவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கதையை உருவாக்க வேண்டும்
- உங்கள் மேசையில் அமர்ந்திருக்கும் மற்றவர்களுடன் கதையைப் பகிர்ந்துகொள்ளுங்கள்

20 நிமிடங்கள்


தமிழில் பேசி மகிழ்வோம்.
தமிழை வாழும் மொழியாக்குவோம்!